சென்னை மாநகராட்சி மஸ்டர்ரோல் குறித்த வழக்கு.

*கு. கா. வி.எண். 25—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை மாநகராட்சியில் நடந்த மஸ்டர்ரோல் ஊழல் சம்பந்தமாக இதுவரையிலும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அதன்படி எந்த அலுவலர் மீதாவது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இவ்வழக்கில் 30–11–78–ந் தேதி கோர்ட்டில் தீர்ப்புச் சொல்லப்பட்டது. சென்னை மாநகராட்சி அலுவலர்களைப் பொறுத்த மட்டில் தண்டனை பெற்ற 51 அலுவலர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். விடுதலை செய்யப்பட்ட எல்லா மாநகராட்சி அலுவலர்களையும் மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

(ஆ) இல்லை.

(முற்பகல் 9-40)

திரு. மி. வின்சென்: இந்த மஸ்டர்ரோல் ஊழல் மூலம் எவ்வளவு தொகை கையாடல் செய்யப்பட்டது? தண்டிக்கப்பட்டவர்கள் சிறையில் இருக்கிறார்களா, வெளியே இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏறத்தாழ எட்டு கோடி ரூபாய் அளவிற்கு கையாடல் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது, தண்டிக்கப்பட்டவர்கள் பலர் ஜாமீனில் வெளியே இருக்கிறார்கள். மாநகராட்சியின் 107 நபர்கள் மீது 1974 ஆம் ஆண்டு வழக்கு தொடரப்பட்டு அந்த 107 பேர்களில் நான்கு பேர்கள் வழக்குகள் முடிவடைவதற்கு முன்பாகவே இறந்து விட்டார்கள். அது போக 103 பேர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டு 51 அலுவலர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். முன்னாள் மேயர்கள் இரண்டு பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். முன்னாள் மன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் 17 பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். தனி நபரான ஒருவர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. சு. பாலன்: சென்னை மாநகராட்சி மஸ்டர் ரோல் வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள் மீண்டும் வழக்காடுவதற்கு உயர்நீதி மன்றம் சென்றிருக்கிறார்கள். ஆகவே அதுபற்றிப் பேசலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழக்குமன்றத்தில் இருப்பதைப் பற்றிப் பேசக் கூடாது.

திரு. மி. வின்சென்ட்: இந்த வழக்குகள் துரிதமாக நடைபெறவும், சமுதாயக் குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் சில பணிகளை அரசு மேற்கொள்ளத் தயாராகவுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: சமூக விரோதச் செயல்களில் யார் ஈடுபட்டாலும் கண்டிப்பாகத் தண்டிக்கப் படுவார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: சென்னை நகரையே உலுக்கிய இந்த மஸ்டர் ரோல் வழக்கின் மீது தண்டனை அளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே நீண்டகாலமாகவே நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற மாநராட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏற்கனவே இது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம்: இந்த மஸ்டர்ரோல் வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள் ஜாமீனில் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் ஜாமீன்களை ரத்து செய்துவிட்டு அவர்கள் தண்டிக்கப்படுவார்களா? அத்தவறு காரணமாக எடுக்கப்பட்ட பணத்தைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்படுமா?

(பதில் இல்லை)

சௌடார்பட்டி அருகே உள்ள அணை.

*நட். கா. வி. எண் 26—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருமங்கலம் தொகுதியில் உள்ள சௌடார்பட்டி அருகே உள்ள அணை எப்போது சேதமடைந்தது?

(ஆ) அது எப்போது செப்பனிடப்படும்?